# 1 அளவீடு

**மதிப்பீடு:**

## I. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு பொருளின் வெப்பம் அல்லது குளிர்ச்சியின் அளவைக் குறிப்பது ______________ ஆகும்.
2. நிறையின் SI அலகு ______________
3. ஒரு மோல் என்பது ______________ அணுக்கள் அல்லது மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது.
4. அணுவினுள் ஏற்படும் அதிர்வுகளின் அடிப்படையில் செயல்படும் கடிகாரங்கள் ______________
5. ஒளிச்செறிவு ______________ ஆல் அளவிடப்படுகின்றது.
6. ஒரு பொருளுக்கு வெப்பத்தை அளிக்கும் போது அதன் வெப்பநிலை ______________
7. ____________ ன் அலகு மீட்டர் ஆகும்.

## II. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

8. ஒரு கடத்தியின் வழியே ஒரு வினாடியில் பாயும் மின்னூட்டங்களின் அளவு ______________ எனப்படும்.

   (அ) மின்னோட்டம் (ஆ) மின்தடை (இ) மின்னழுத்தம்

9. வெப்பநிலையின் SI அலகு ________________.

   (அ) செல்சியஸ் (ஆ) பாரன்ஹீட் (இ) கெல்வின்

10. ஒளிச்செறிவின் SI அலகு ________________.

   (அ) மோல் (ஆ) கேண்டிலா (இ) ஆம்பியர்

## III. சரியா/தவறா எனக் குறிப்பிடவும்.

1. மின்னோட்டத்தின் SI அலகு கிலோகிராம் (சரி/தவறு)
2. இயற்பியல் தராசு, சாதாரண தராசை விடத் துல்லியமானது. (சரி/தவறு)
3. மின்னோட்டத்தை அளவிடும் கருவி அம்மீட்டர் ஆகும். (சரி/தவறு)
4. அணுக்கடிகாரங்கள் GPS கருவிகளில் பயன்படுகின்றன. (சரி/தவறு)

LIVEWORKSHEETS